விடுதலைப் புலிகளின்
கல்விக் கொள்கை



தேசியத் தலைவர்

வே. பிரபாகரன் அவர்கள்

அளித்த விளக்கம்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு
STUDENT ORGANISATION OF LIBERATION TIGERS

14-02-93, 19-04-93
ஆகிய தினங்களில்
முறையே
தமிழீழ பொதுக்கல்வித் தேர்விலும்,

அன்னை பூபதி பொது அறிவுத் தேர்விலும்

சித்தியெய்திய மாணவர்களிற்கான
பரிசளிப்பு நிகழ்வின்போது
எமது தேசியத் தலைவர்

திரு. வே. பிரபாகரன் அவர்களால்
வழங்கப்பட்ட

ஆசிச் செய்திகள்

வெளியீடு:

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு
தமிழீழம்.

14-02-1993 அன்று

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில்

சிறப்புத் தகைமைகளைப்

பெற்ற மாணவர்களுக்கு

பரிசில்கள் வழங்கும் நிகழ்வையொட்டி

தேசியத் தலைவர்

திரு. வே. பிரபாகரன் அவர்களால்

வழங்கப்பட்ட

ஆசிச் செய்தி

போராட்டம் கல்விக்கு கவசம்
கல்வி போராட்டத்திற்கு காப்பரண்

கல்விக் கொள்கைபற்றி
தலைவர் பிரபாகரன் விளக்கம்

அன்புடையீர்!

மனித வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் கல்வி ஆதாரமானது. ஆணிவேர் போன்றது.

கல்வி பெறும் உரிமை மனித சுதந்திரங்களில் அடிப்படையானது. அறியாமையிலிருந்து விழிப்புற்று, தனது வாழ்க்கை பற்றியும் தான் வாழும் உலகம் பற்றியும் அறிந்து கொள்வதற்கு ஒவ்வொரு தனிமனிதப் பிறவிக்கும் உரிமையுண்டு. தனது ஆற்றல்களை வளர்த்து, தனது ஆளுமையை மேம்படுத்தி, சுதந்திரமாக சிந்தித்துச் செயற்படும் உரிமை ஒவ்வொருவருக்கும் உரித்தானது.

இந்த மூலாதார உரிமையைப் பறித்தெடுத்து தமிழீழத்தின் கல்வித்துறையை சிதைத்துவிட சிங்களப் பேரினவாதம் நீண்டகாலமாகவே முயன்று வருகிறது. இதன் விளைவால் எமது சமூகத்தின் கல்வி வாழ்வு பாரதூரமான அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது.

கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக் கட்டமைப்பை தாங்கி நிற்கும் தூண்கள். இந்தத் தூண்களைத் தகர்த்துவிட எதிரி முனைகிறான். இனத் தனித்துவத்தை அழிப்பது அவனது நோக்கம்.

நாம் எமக்கு உரித்தான உரிமைகளை வென்றெடுக்கப் போராடுகிறோம். அதே வேளை, எமது சமூக வாழ்விற்கு ஆதாரமான அமைப்புகள் அழிந்து போகாது பாதுகாக்கவும் நாம் போராடவேண்டியிருக்கிறது ஆகவே, இரு முனைகளில், ஒரே வேளை

யில் போராடவேண்டியவர்களாக நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இது தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நிர்ப்பந்தம்.

தமிழீழ மக்களின் விடுதலை இயக்கம் என்ற ரீதியில் இந்த இருமுனைப் போராட்டத்தை முன்னெடுப்பதில் நாம் தெளிவோடு, உறுதியோடு, தீர்க்கமாக உழைத்து வருகிறோம். இந்த இரு முனைகளுக்கும் இடையில் வெடிக்கும் முரண்பாடுகளை களைந்துவிடுவதிலும் நாம் நிதானமாக செயற்படுகிறோம்.

உரிமைகளுக்காக நாம் தொடுத்த போராட்டம் இன்று உயிர்வாழ்வதற்கான போராட்டமாக விரிவாக்கம் பெற்றிருக்கிறது. அன்றொரு காலம் நாம் அமைதி வழியில் உரிமைகேட்டோம். இன்று நாம் இரத்தம் சிந்திப் போராடவேண்டியிருக்

கிறது. உயிர்ப்பலி கொடுத்து உயிர்வாழ வேண்டியிருக்கிறது.

இன அழிவைத் தடுத்து, எமது மண்ணையும் மக்களையும் பாதுகாப்பது இன்று எமது விடுதலை இயக்கத்தின் முதன்மையான கடனாக உள்ளது. இதற்குப் போராடியே ஆகவேண்டும். போராடி வாழ்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

போராடுவதற்கு போராளிகள் வேண்டும். எதிரியுடன் போர் நடத்த ஒரு படை வேண்டும். இந்த விடுதலைப் படை இல்லாது போனால் எமது இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்த முடியாது. இந்தப் போராளிகளை, இந்த இளம்புலி வீரர்களை, நாம் எமது மக்கள் சமுதாயத்திலிருந்தே அணிதிரட்டவேண்டியுள்ளது. நாம் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பதில்லை. இது ஒரு தேசிய விடுதலைப்போர் என்பதால் சுய

விருப்பிலேயே இளம் போராளிகள் எமது இயக்கத்தில் இணைந்து கொள்கிறார்கள். தமது சுயத்தைத் துறந்து, தமது சொந்த வாழ்வின் சுகபோகங்களைத் துறந்து, பந்தத்தின் பற்றுறவுகளைத் துறந்து, தமது மண்ணையும் மக்களையும் நேசிக்கும் விடுதலைப் பற்றாளர்கள் எம்முடன் இணைகிறார்கள். இந்தப் போராளிகளின் இலட்சிய வாழ்க்கையையும், அர்ப்பணிப்பையும் நாம் போற்றவேண்டும். கௌரவிக்க வேண்டும்.

தாயக விடுதலைக்கு தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும் கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது

போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பது போல் கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்கவேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்துகொள்ளும் வகையில் மாணவ சமூகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசிய கடமைப் பாடாகும்.

எமது இயக்கம் விடுதலைப் போரை முன்னெடுத்துவரும் அதேவேளை கல்வித் துறையின் மேம்பாட்டிற்காக ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. அதற்கான அமைப்புகளையும் கட்டி எழுப்பி வருகிறது.

எமது தேசிய வாழ்வையும் வளத்தையும் மேம்படுத்தும் இலக்கில் எமது கல்வித் துறை சீரமைக்கப்பட வேண்டும். காலனித்துவ சுரண்டலின் தேவைகளைப் பூர்த்தி

செய்யவும் சிங்களப் பேரினவாதத்தின் கருத்தாதிக்கத்தை திணிக்கவும் உருவாக்கப்பட்ட கல்வியமைப்பு மாற்றப்பட வேண்டும். எமது தேசிய போராட்டம், எமது பண்பாட்டு வாழ்வு, எமது தேசிய பொருண்மிய வளம், எமது தேசிய இனத்தின் வரலாறு ஆகியவற்றின் உண்மைநிலையும் பெறுமானமும் உணரப்படும் வகையில் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இன்றைய அறிவியல் தொழில்நுட்பத் துறைகளின் வளர்ச்சியையும் அதன் ஆக்க பிரயோகங்களையும் கற்றறியும் வாய்ப்பும் எமது இளம்பரம்பரைக்கு கிட்டுவதற்கு வழிசெய்ய வேண்டும். ஒட்டுமொத்தத்தில், எமது தேசிய நலன் பேணப்படும் வகையில் கல்விச் சீர்திருத்தம் இடம்பெற வேண்டும். இந்த இலக்குகளை அடையும் வகையில் எமது அமைப்பான தமிழீழக் கல்விக் கழகம்

ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டு வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று, தமிழீழத்தில் கல்வித்துறை சீரழிந்த நிலையில் உள்ளது. தமிழரின் கல்வியை திட்டமிட்ட வகையில் அரசு புறக்கணித்து வருகிறது. சிங்கள ஆயுதப்படைகளின் போர் நடவடிக்கைகளும் பொருளாதார நெருக்குதல்களும் நிலைமையை மேலும் மோசமாக்கி வருகிறது. எத்தனையோ நெருக்கடிகள் இடர்பாடுகளை எதிர்கொண்டு எமது மாணவ சமூகம் கல்வியைக் கற்கவேண்டியிருக்கிறது. தமது ஆர்வத்தினாலும், திறமையினாலும், கடும் உழைப்பினாலும் கல்விகற்று பொதுத் தேர்வுக்கு தயாரானாலும் உரிய காலத்தில் அவை நடைபெறுவதில்லை. தேர்வு நடைபெறும் காலங்களிலும் அரச படைகள் அமைதியைக் குலைத்துவிடுகின்றன. இத்

தனை தடைகளையும் தாண்டித்தான் எமது மாணவர்கள் தேர்வுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

இந்த சூழ்நிலையில் க. பொ. த. சாதாரண தர தேர்வுக்கு ஈடாக, முதல் தடவையாக தமிழீழப் பொதுக் கல்வித்தேர்வை தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை சிறப்புற நடத்தி முடித்திருக்கிறது. இந்த முயற்சியை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். அத்துடன் இத்தேர்வில் தோற்றிய, தேர்ச்சிபெற்ற அனைத்து மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

வே. பிரபாகரன்

தலைவர்

தமிழீழ விடுதலைப் புலிகள்

19-04-1993 அன்று

அன்னைபூபதி பொது அறிவுத் தேர்வில்

சிறப்புத் தேர்ச்சி பெற்ற

மாணவர்களைப் பாராட்டி

பரிசில்கள் வழங்கும்

நிகழ்வையொட்டி

தேசியத் தலைவர்

திரு. வே. பிரபாகரன் அவர்களால்

வழங்கப்பட்ட

ஆசிச்செய்தி

தலைமைச் செயலகம்
தமிழீழம்
19-04-1993

அன்புடையீர்,

கல்வி என்பது அறிவு சார்ந்தது. ஒருவன் தன்னைப்பற்றியும், தனது சமூக வாழ்வுபற்றியும், தான் வாழும் உலகம் பற்றியும் அறிந்துகொள்வதற்கு கல்வி அத்தியாவசியமானது.

கல்வியறிவு ஒருவனது ஆளுமையைச் சிறப்பிக்கிறது. அவனது வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது. அவனை முழு மனிதன் ஆக்கிவிடுகிறது.

இன்றைய அறிவியல் உலகம் விரைந்து பரந்து வளர்ந்து வருகிறது. இந்த அறிவியல் அசைவியக்கத்தால் உலகத்தில் பிரமிக்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

மனித வாழ்வும் புரட்சிகரமாக மாறி வருகிறது.

இந்த அறிவுசார் நவயுகத்தில், வரையறுக்கப்பட்ட, துறைசார்ந்த படிப்புகள் ஒரு பரந்த உலகப் பார்வையையும் விரிந்த வாழ்வனுபவத்தையும் கொடுக்கப்போவதில்லை. எனவே, துறைசார்ந்த பள்ளி. கல்லூரிப் படிப்புகளோடு பொது அறிவுத் திறனையும் எமது இளம் பரம்பரையினர் வளர்த்துக்கொள்வது இன்றியமையாதது. இது இன்றைய காலத்தின் தேவையும்கூட.

நாம் கற்கின்ற அல்லது செயல்படுகின்ற துறை என்ற வரம்பிற்குள் மட்டும் நாம் ஒதுங்கி நின்றுவிடக்கூடாது, அதுவும் ஏட்டுக்கல்வியோடு நின்றுவிட்டால் வாழ்வின் முழுமையை நாம் தரிசித்துக்கொள்ள முடியாது. முழுமையான சமூக மனிதர்

களாக வாழமுடியாது. அன்றாட வாழ்விற்கும் தேவைகளுக்கும் பயன்படும் வகையில் நாட்டின் நடப்பியல்புகளையும் உலகத்தின் போக்குகளையும் புரிந்துகொள்ளும் வகையில் நாம் எமது பொது அறிவை வளர்த்துக்கொள்வது அவசியம். அதுவே எம்மைச் சமூகத்திற்குப் பயனுள்ள மனிதர்களாக ஆக்கிவிடுகிறது.

இன்று, எத்தனையோ நெருக்கடிகள், இடர்பாடுகள் மத்தியில் எமது மாணவ சமூகம் கல்வியைப் பயின்றுவருகிறது. இம் மாணவர்களுக்கு பொது அறிவில் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தும் நோக்கத்தோடு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடத்தப்படுகின்ற அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வானது மிகவும் ஆக்கபூர்வமான முயற்சி என நான் கருதுகிறேன்.

எமது மாணவர்கள் தமது பொது அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான பாடத் திட்டங்கள், கற்பித்தல்கள் இல்லாத நிலையிலும், பொது அறிவைத் தாமாகவே பெற்றுக்கொள்வதற்கான ஊடகங்கள் அருகிவிட்ட இன்றைய சூழ்நிலையிலும் 35 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் இம்முறை இந்தப் பொதுத் தேர்வில் தோற்றியிருப்பதும், பல மாணவர்கள் மிகச் சிறந்த வகையில் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியிருப்பதும் பாராட்டத்தக்க விடயமாகும்.

அந்நியனால் எமது தேசம் ஆக்கிரமிக்கப்பட்ட மிக நெருக்கடியான காலகட்டத்தில், எமது விடுதலைப் போராட்டத்தை வீறுபெறச் செய்த தற்கொடையாளி அன்னை பூபதியின் நினைவாக பொது அறிவுத் தேர்வை ஆண்டுதோறும் நடத்தி

வரும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, அந்தத் தாயின் நினைவு நாளில், அந்த அன்னையின் பேரில் அமைந்த கலை அரங்கத்தில், சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களைக் கௌரவிப்பது சாலப் பொருத்தமானதாகும்.

தமிழீழ மாணவர்களின் கல்வி மேம் பாட்டிற்காக விடுதலைப் புலிகளின் மாண வர் அமைப்பு மேற்கொண்டுவரும் இந்த நன்முயற்சி தொடர வேண்டும். இப் பொதுத் தேர்விலே பங்குகொண்ட அனைத்து மாணவர்களையும் பாராட்டுவ தோடு, தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வியக்கத்தக்க முறையில் தனது திற னாற்றலை வெளிக்காட்டிய 4ம் ஆண்டு மாணவன் செல்வன் வி. கோகுலனின் ஆற்

றலை மெச்சுகிறேன், கோகுலனுக்கு எனது சார்பில் சிறப்புப் பரிசை வழங்குவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்

"இராணுவ ஆதிக்கத்திற்கும் அழுத்தத்திற்கும் புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக்கொடுத்ததே யில்லை. கொண்ட கொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொடுத்தது இல்லை. எமது இயக்கத்தின் இந்த உறுதிப்பாட்டை உலகத்தின் மிகப் பெரிய இராணுவமே பரீட்சித்துப் பார்த்து தோல்வி கண்டது. சிங்கள இராணுவமும் இந்த வரலாற்றுத் தவறை சந்திக்கத்தான் நேரிடும்".

தலைவர்

வே. பிரபாகரன்.